**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC No.34/2025**

**வழக்கு சாட்சி: P.W.2**

**தேதி: 19.12.2025**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | மாரியம்மாள் | **ஜாதி:** |
| க. பெயர் : | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**முதல் விசாரணை:**

நான் நாட்டாகுடியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 என் கணவர். ஆஜர் எதிரி குண்டுமணியை தெரியும். எதிரி என் ஊர்க்காரர். என் கணவர் லாரியில் லோடு மேன் வேலை செய்கிறார். என் கணவர் காலை 4.30 மணிக்குள் படமாத்தூருக்கு வேலைக்கு போய்விடுவார். போன வருடம் எங்கள் ஊரில் கும்பாபிஷேகம் நடந்து 48 வது நாள் பூஜை செவ்வாய்கிழமை அதற்கு முதல் நாள் திங்கட்கிழமை அன்று காலை 4.00 மணிக்கு என் கணவர் வீட்டிலிருந்து பைக்கில் வேலைக்கு கிளம்பி போய்விட்டார். காலை 5.00 மணிக்கு என் மகன் போன் பண்ணி அப்பாவை குண்டுமணி வெட்டிவிட்டான், ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போகிறேன் என்று சொன்னான். தையல் போட்டிருக்கு என்றும் சொன்னான். என்னை ஆஸ்பத்திரிக்கு வரச் சொன்னான். திருப்புவனம் ஆஸ்பத்திரியில் வைத்திருக்கிறேன் என்று சொன்னான். நானும் பதறி அடித்து திருப்புவனம் ஆஸ்பத்திரிக்கு நடந்து சென்று ஆட்டோவில் ஏறி 5.30 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு போனேன். நான் போகும் போது என் கணவருக்கு தையல் போட்டு வைத்திருந்தார்கள். பிறகு 6.00 மணிக்கு பூவந்தி காவல்நிலையம் வந்து நான், என் மகன், என் கணவர் மூன்று பேரும் சென்று என் கணவர் போலீசில் புகார் கொடுத்தார். என் கணவர் குண்டுமணி தான் அருவாளை கொண்டு வெட்டினார் என்று சொன்னார். கும்பாபிஷேகம் நடத்திட்டீங்க 48 வது நாள் பூஜை நடத்தவிடமாட்டேன் என்று சொல்லி வெட்டியதாக என் கணவர் சொன்னார்.



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:03:39 +0530

போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் கணவர் எதிரி கும்பாபிஷேகம் நடத்திட்டீங்க 48 வது நாள் பூஜை நடத்தவிடமாட்டேன் என்று சொல்லி வெட்டியதாக ஆஸ்பத்திரியில் சொன்னரா போலீஸ் ஸ்டேசனில் வைத்து சொன்னாரா என்றால் ஆஸ்பத்திரியில் வைத்து சொன்னார். காலை 6.00 மணிக்கு பூவந்தி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு தான் நாட்டாகுடிக்கு போனோம் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:03:47 +0530

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC No.34/2025**

**வழக்கு சாட்சி: P.W.1**

**தேதி: 19.12.2025**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | பாலு | **ஜாதி:** | |
| த. பெயர் : | | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**முதல் விசாரணை:**

நான் நாட்டாகுடியில் குடியிருந்து வருகிறேன். ஜல்லி மண் லாரியில் லோடு மேன் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி எங்கள் ஊர்க்காரர். எதிரியை நான் அண்ணன் தம்பி என்று கூப்பிடுவேன். எனக்கு திருமணமாகி மூன்று பெண்களும், ஒரு மகனும் இருக்கிறார்கள். எங்கள் ஊரில் 2024ம் வருடம் 10வது மாதம் தேதி ஞாபகம் இல்லை. ஒருநாள் அய்யனார் கோவில், பிள்ளையார்கோவில், அம்மன் கோவில் ஆகிய கோவில்களில் கும்பாபிஷேகம் நடந்தது. கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் பிள்ளையார் சாமியை தூக்கி கொண்டு போய் கண்மாய்க்குள் உள்ள கேணியில் போட்டுவிட்டார்கள். எதிரி குண்டுமணி தான் தூக்கி கொண்டு போய் போட்டதாக ஒப்புக்கொண்டார். பிறகு பிள்ளையாரை தூக்கி வைத்து கும்பாபிஷேகம் முடிந்துவிடட்து. பிறகு 48 நாள் மண்டல பூஜை வைத்திருந்தார்கள். அதற்கு முன்பு ஊருக்குள் பைப்பில் தண்ணீர் பிரச்சனை. குண்டுமணி வீட்டு பக்கம் பைப்பில் தண்ணீர் போகவில்லை. அதனால் டேங்கில் ஏறி பைப்பில் கல்லை போட்டு குண்டுமணி பைப்பை அடைத்துவிட்டான். டேங்கையும் உடைத்துவிட்டான். கணேசன் ஏன்டா பைப்பை உடைத்தாய் என்று எதிரியிடம் ஊர்க்காரர்களையும் கூப்பிட்டு கணேசன் கேட்டார். அதற்கு எனக்கு தண்ணீர் வரவில்லை, அதனால் நான் போட்டேன் என்று சொன்னான். அதனால் தான் கும்பாபிஷேகம் நடத்த விடக்கூடாதென்று பிள்ளையாரை தூக்கி கேணிக்குள் போட்டான். மண்டல பூஜை அன்று மண்டல பூஜை நடத்தவிடாமல்



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:03:56 +0530

பண்ணுவதற்காக கொலையை பண்ணினான். 04.11.2024 ம் தேதி காலை 4.20 மணிக்கு நான் வேலைக்கு செல்வதற்காக வீட்டை விட்டு கிளம்பினேன். நான் என்னுடை XL வாகனத்தில் நாட்டாகுடி வழியாக படமாத்தூருக்கு போனேன். எதிரி நல்லாகுளம் பாலத்தில் ரோட்டில் நின்றுகொண்டிருந்தான். நான் ஏம்பா இப்படி நிக்கிற ஓரமா நில்லுமா என்று சொன்னேன். அதற்காக அவன் என் பின்னாடியே ஸ்கூட்டியில் வந்து மெயின் ரோட்டில் ஏறும் இடத்தில் என் வண்டிக்கு முன்னால் வந்து நிறுத்தி அருவாளை தூக்கி ஓங்கினான். நான் தள்ளிவிட்டேன், அதில் அவன் கீழே விழுந்துவிட்டான். மறுபடியும் அருவாளை எடுத்து என்னை எரிந்தான். அதில் எனது இடது காலில் பட்டது. அதில் எனக்கு வெட்டுப்பட்டது. (இடது முட்டிகாலில் உள்ள தழும்பை காண்பித்தார்) நான் எதிரி அருவாள் வைத்திருக்கிறான் வெட்டிவிடுவான் என்று என் வண்டியை எடுத்துவிட்டு படமாத்தூருக்கு சென்றுவிட்டேன். படமாத்தூர் சென்று கந்தவேல் டீக்கடையில் போய் நின்றேன். அங்கும் அருவாளை எடுத்துக்கொண்டு வந்தும் வெட்ட வந்தான். அந்த டீக்கடையில் டீ குடித்து கொண்டிருந்து ஆட்கள் இருந்தார்கள். டீக்கடைகாரர் கந்தவேல் வந்து தடுத்தார். எதிரி இன்னைக்கு தப்பிச்சிட்டல உன்னைய கொல்லாம விட மாட்டேன் என்று சொல்லி நாட்டகுடி பக்கம் போனார். நான் அங்கிருந்து என் மகனுக்கு போன் பண்ணினேன். என் மகன் வந்து என்னை திருப்புவனம் ஆஸ்பத்திரிக்கு கூட்டி சென்றார். எனக்கு திருப்புவனம் ஆஸ்பத்திரியில் தையல் போட்டுவிட்டு அப்பொழுதே என் மகன் ஊரில் கணேசன் கொலை செய்துவிட்டான் என்று கூட்டி கொண்டு விட்டார். அங்கு என்னை போலீசார் விசாரித்து பூவந்தி காவல்நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றார்கள். அவர்களே பூவந்தி காவல்நிலையத்திற்கு போன் பண்ணி சொன்னார்கள். பிறகு அன்று காலை 10.00 மணிக்கு பூவந்தி காவல்நிலையம் சென்று அங்கு ஒரு வெளி ஆளிடம் சொல்லி புகார் எழுதி அதில் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு **அ.த.சா.ஆ.1**. எதிரி என்னை தாக்கிய அருவாள் 1 1/2 அடி இருக்கும். அது மரக்கைப்பிடி போட்டது. டீக்கடையில் என்னை எதிரி மிரட்டிய போது காலை சுமார் 4.45 இருக்கும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:04:04 +0530

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

படமாத்தூர் என்ற ஊர் மதுரை தொண்டி ரோட்டிலிருந்து அரை பர்லாங் இருக்குமா என்றால் ஒரு 300 மீட்டர் இருக்கும். படமாத்தூர் டீக்கடையிலிருந்து பார்த்தால் தொண்டி ரோட்டில் எந்த வாகனம் செல்கிறது என்று தெரியாது என்றால் சரிதான். நல்லாகுளம் விலக்கில் எந்தவொரு தெரு விளக்கும் இல்லை என்றால் சரிதான். எதிரி நல்லாகுளம் விலக்கில் இடது பக்கம் நின்றாரா? வலது பக்கம் நின்றாரா என்றால் நடுரோட்டில் நின்றார். எதிரி என்ன கலர் கைலி கட்டிருந்தார் என்றால் பேண்ட் போட்டிருந்தார். எனக்கு ஏற்பட்ட வெட்டு காயத்திற்கு எத்தனை தையல் போட்டீர்கள் என்றால் ஐந்து. திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு காலை 6.00 மணிக்கு போயிருப்பேனா என்றால் 8.00 மணிக்கு போனேன். காலை 4.45 மணிக்கு எனக்கு ஏற்பட்ட சம்பவத்திலிருந்து காலை 8.00 மணிக்கு நான் ஆஸ்பத்திரி செல்லும் வரை நான் எங்கு இருந்தேன் என்றால் நான் சம்பவம் நடந்த பிறகு நாட்டாகுடிக்கு வந்துவிட்டேன். அங்கிருந்து போலீசார் என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள். கணேசன் இறந்து கிடந்ததை நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு எப்போது போனேன் என்றால் அன்று 12.00 மணிக்கு மேல் போனேன். திருப்புவனம் அரசு மருத்துவமனையில் எனக்கு எதனால் காயம் ஏற்பட்டது என்று சொன்னேனா என்றால் முதலில் அருவாள் வெட்டிவிட்டது என்று சொன்னேன், போலீசார் ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணி வெட்டிவிட்டான் என்று சொன்னார். வெட்டிவிட்டான் என்று சொன்ன பிறகு தான் ஆஸ்பத்திரியில் எனக்கு சிகிச்சை அளித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் சிகிச்சை அளிக்க சொல்லி டாக்டரிடம் சொன்னார் என்றால் சரிதான். அதன் பிறகு நேரடியாக நான் நாட்டாகுடிக்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். அதன் பிறகு தான் போலீசார் சொல்லி தான் நான் பூவந்தி காவல்நிலையத்திற்கு போனேன் என்றால் சரிதான். நான் ஆஸ்பத்திரியில் இருந்து நாட்டாகுடி வந்த பிறகு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு போனோ, காவல்நிலையத்திற்கு போனேனா என்றால் போலீஸ் ஸ்டேசனில் போய் ரிப்போர்ட் செய்து விட்டு தான் வந்தேன். என்னுடன் போலீஸ் வந்தார்களா என்றால் இல்லை. நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்த போது யார் இருந்தார்கள் என்றால் ஒரு



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:04:14 +0530

பெண் போலீஸ்ம், இரண்டு போலீசாரும் இருந்தார்கள். பிரேதத்தை தூக்கி கொண்ட போது நான் இருந்தேனா என்றால் நான் இருந்தேன். அது எத்தனை மணி இருக்கும் என்றால் நேரம் பார்க்கவில்லை. என் மகன் எங்கிருக்கிறார் என்றால் திருப்புவனத்தில் இருக்கிறான். சம்பவத்தின் போது திருப்புவனத்தில் இருந்து தான் என் மகன் வந்தான் என்றால் சரிதான். கணேசன் இறந்துகிடந்த போது நானும், பிறகு என் வீட்டில் யார்யார் இருந்தார்கள் என்றால் நானும், என் மனைவியும் இருந்தோம். என் மகன் எனக்கு சிகிச்சை அளித்து விட்டு என்னை அனுப்பிவிட்டான் என்றால் சரிதான். நான் பார்த்த போது கணேசன் இறந்த சம்பவ இடத்திற்கு போலீசார் எப்போது வந்தார்கள் என்றால் நான் படமாத்தூரில் இருந்தேன் அதனால் தெரியாது. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், கணேசன் இறந்துவிட்ட காரணத்தினால், எதிரியை குண்டாசில் அடைக்க வேண்டும் என்பதற்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவின் பேரில் மானாமதுரை உட்கோட்டத்தில் உள்ள பூவந்தி மற்றும் திருப்பாச்சேத்தி காவல்நிலையத்தில் வேவ்வேறு காவல்நிலையங்களில் புகார் பெறப்பட்டு பொய்யாக என்னை ஏற்கனவே ஏற்பட்ட காயத்திற்கு தற்போது ஏற்பட்டது போல் புகார் கொடுக்க சொன்னதன் பேரில் நான் புகார் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரிலுள்ள இரு சமூகத்தினருக்கிடையே உள்ளாட்சி தேர்தல் சம்பந்தமாக முன் விரோதத்தின் காரணமாக மற்ற சமூகத்தினருக்கு எதிராக கணேசன் அதிகமாக பேசி கோவில் பிரச்சனைகளில் வேறு யாரும் தலையிடக்கூடாது என்று அவதூறாக பேசி வந்த நிலையில் அவரை அவருடைய எதிர் சமூகத்தினர் குத்தி கொலை செய்து விட்டனர் என்றும், நான் சொல்வது போன்று எதிரி என்னை வழி மறுத்து தாக்கவில்லை என்றும் உங்களுக்கு திருப்புவனம் மருத்துவமனையில் தையல் எதுவும் போடவில்லை என்றும் இந்த வழக்கிற்காக காயம் ஏற்பட்டது போன்று காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மருத்துவமனையில் சிகிச்சை அளித்தது போன்று போலியாக பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஏ.ஆர் சான்றை வைத்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த வழக்கிற்கு காவல்துறையினரும், இறந்தவர் ஊரை சார்ந்தவர் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:04:22 +0530

சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.12.19 19:04:29 +0530

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.12.19 19:04:36 +0530